## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

*1.* **கேள்வி** : **CDCE இல் பதிவுசெய்யும் மாணவர் ஒருவருக்கு மின்னஞ்சல் முகவரி ஒன்று இருத்தல் அவசியமா?**

**பதில்** : *ஆம். மின்னஞ்சல் முகவரி கட்டாயமானதாகும். மின்னஞ்சலினூடாக* ***(E-mail)*** *மாணவர்களுக்கு தகவல்கள் அனுப்பப்படும். அத்துடன் மாணவர்களுக்கான கருத்தரங்குகள் மற்றும் கால அட்டவணைகள் சம்பந்தமான விடயங்கள் மாணவரின் மின்னஞ்சலுக்கே* ***(E-mail)*** *அனுப்பப்படும். எமது இணையதளத்தளத்திலும்* ***(Website)*** *புதிய அறிவிப்புகள் மற்றும் விடயங்கள் வெளியிடப்பட்டுள்ளதா என்று அடிக்கடி பார்த்துத் தெரிந்துகொள்ளல் வேண்டும்.*

*2.* **கேள்வி** : **பட்ட கற்கைநெறியை தொடர்ந்துகொண்டிருக்கும்போது தெரிந்துகொள்ளவேண்டிய சில விடயங்கள் இருப்பின் அவற்றை எவ்வாறு தெரிந்துகொள்வது?**

**பதில்** : *தெரிந்துகொள்ளவேண்டிய விடயத்தைப் பெறுத்து யாரிடம் கேட்பது என்பது தீர்மானிக்கப்படும். கங்கைநெறியின் விதிகள், கட்டணம், பரீட்சை நடைபெறும் தினம் மற்றும் பெறுபேறுகள் ஆகியன கற்கைநெறியின் சம்பந்தமான விடயங்கள் CDCE இன் உதவிப் பணிப்பாளரிடம் அல்லது அலுவலகத்தின் குறித்த விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள அலுவலரிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம். CDCE க்கு வருகை தந்து விசாரிப்பின் இந்நிறுவனத்தின் வரவேற்பாளரிடம் தங்கள் தேவையைக் கூறின் வரவேற்பாளர் குறித்த அலுவலருக்கு அறிவிப்பார். தொலைபேசியில் தொடர்புகொள்ளும்போது வரவேற்பாளர் குறித்த அலுவலருக்கு தொலைபேசி மூலம் தொடர்புகொள்வதற்கு ஏற்பாடு செய்வார். இக்கையேட்டில் அவசியமான தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி* ***(E-mail)*** *உண்டு. அதனூடாக அவசியமான விடயங்களைத் தெரிந்துகொள்ளலாம். பாடத்திட்டங்கள் மற்றும் கற்கை அலகுகள் சம்பந்தமான விடயங்கள் பணிப்பாளரை அல்லது பிரதிப் பணிப்பாளரை அல்லது பாட ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். அவர்களினது தொலைபேசி இலக்கமும் இக்கையேட்டில் உள்ளது.*

*3.* **கேள்வி** : பட்டத்தை நிறைவுசெய்வதற்கான கால எல்லை யாது?

**பதில்** : *வகுப்புடன் கூடிய பட்டம் பெறவேண்டுமாயின் 3 தடவைகளில் பரீட்சை எழுதப்பட்டிருத்தல் வேண்டும். வகுப்பு இல்லாத பட்டத்தைப் பெறுவதற்கு 10 தடவைகளில் 100 மட்ட பரீட்சை எழுதப்பட்டிருத்தல் வேண்டும். இது முதலாவது தடவையையும் உள்ளடக்கியதாகும். இதன் பின்பு மாணவரின் பதிவு இயற்கையாகவே இரத்தாகிவிடும். வகுப்பு சித்தியுடன் பட்டத்தைப் பெறுவதற்கு சகல மட்டங்களிலும் (100–300) ஒரே தடவையில் சித்தியெய்துதல் அவசியமாகும். (குறைந்தமட்ட சித்தியும் ('D' மற்றும் 'D+') ஏற்றுக்கொள்ளப்படும்). பட்டத்தின் சில கற்கை அலகுகளில் பரீட்சைகளுக்கு மீண்டும் தோற்றினால், அவை 300 மட்டங்களுக்குள் நிறைவு செய்தல் வேண்டும். மருத்துவ மற்றும் பல காரணங்களுக்காக வகுப்புக்களுடன் கூடிய நீடிப்புக்களை கலை பட்டப்படிப்பு சபையினால் பெற்றுக்கொண்ட மாணவர்களின் நீடிப்புக்கள் இடைவெளிகளாக கருதப்படமாட்டாது என்பதுடன் அவர்களுக்கான நிபந்தனைகளும் வேறுபட்டதாக இருக்கும். மேற்படி மாணவர்களுக்கு 300 மட்டத்தின் பின் முகங்கொடுக்கும் பரீட்சை முதல் அமர்வாக கொள்ளப்படும். ஒரு தொகுதி மாணவர்கள் 100 மட்டத்தில் தொடர்ச்சியாக 10 தடவைகள் பரீட்சைகள் நடைபெறும் வரை பரீட்சை எழுதலாம் (முதல் தடவை உட்பட). அதேவேளை 200, 300 மட்டத்தின் பரீட்சைகளுக்கு முகம்கொடுக்கவும் முடியும். இப்பரீட்சை மூலம் கிடைக்கும் பட்டம் வகுப்பல்லாத பட்டமாகும்.*

***"குறித்த ஒரு தொகுதி மாணவர்களுக்கு CDCE யினால் வருடாந்தம் நடத்தப்படும் 100 மட்டத்திற்கான தொடர்ச்சியான 10 பரீட்சைகளின் பின் அத்தொகுதி மாணவர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும்."***

***4.*** ***கேள்வி*** : மூன்று தடவைகளும் முயற்சி செய்தும் அடிப்படை கற்கைநெறி (FDN) ஒன்றில்' சித்தியடைய முடியவில்லையாயின் என்ன நடக்கும்?

***பதில்*** : *பட்ட கற்கைநெயிலிருந்து நீர் விலகிவிடல் வேண்டும்.*

***5.*** ***கேள்வி*** : கற்றைநெறி அலகுகளை தெரிவுசெய்யும் போது கருத்திற்கொள்ள வேண்டியவை யாவை?

***பதில்*** : *அடிப்படை கற்கைநெறி அலகுகளை சகலரும் தெரிவுசெய்தல் வேண்டும். துணைப்பாட அலகுகளில், 3 மட்டங்களுக்குமாக கற்கைநெறி அலகுகளை 3 அட்டவணைகளில் இருந்து தெரிவுசெய்தல் வேண்டும். அதில் 100 மட்டத்தில் ஒரு கற்கைநெறி அலகையும் 200 மட்டத்தில் நான்கு கற்கைநெறி அலகுகளையும் 300 மட்டத்தில் நான்கு கற்கைநெறி அலகுகளையும் தெரிவுசெய்தல் வேண்டும்.*

*பிரதான பாடங்கள் மூன்றைத் தெரிவுசெய்து அப்பாடங்களை மூன்று மட்டங்களிலும் கற்றல் வேண்டும். ஒரு மட்டத்தில் ஒரு பிரதான பாடத்தில் இரண்டு கற்கைநெறி அலகுகளை தெரிவு செய்தல் வேண்டும். (பிரதான பாடங்கள் 3 அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ளன. ஒரு அட்டவணையிலிருந்து ஒரு பாடம் வீதம் தெரிவுசெய்தல் வேண்டும்.) எவ்வாறாயிலும் இறுதியில் வெவ்வேறு 3 பிரதான பாடங்கள் தெரிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.*

***6.*** ***கேள்வி*** : சகல கற்றைநெறி அலகுகளும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் காணப்படுகிறதா? மொழிமூலத்தை எவ்வாறு தெரிந்துகொள்வது?

***பதில்*** : *சகல கற்கைநெறி அலகுகளும் மூன்று மொழிகளிலும் இல்லை. இக்கையேட்டில் கற்கைநெறி அலகுகளின் முன்னால் S, T, E ஆகிய மூன்று எழுத்துகளில் மொழிமூலம் காட்டப்பட்டுள்ளது.*
*S=சிங்களம், T=தமிழ் , E=ஆங்கிலம்*

***7.*** ***கேள்வி*** : தெரிவுசெய்யப்பட்ட கற்றைநெறி அலகை மாற்றிக்கொள்ள முடியுமா?, எப்போது மாற்றலாம்?

***பதில்*** : *அடிப்படை கங்கைநெறிகள் (FDN) கட்டாயமானவையாதலால் மாற்றிக்கொள்ளும் சந்தர்ப்பம் இல்லை.*

*துணைப்பாட அலகுகளை அவை பதிவுசெய்த திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் மாற்றிக்கொள்ளலாம்.*

*பிரதான பாடங்களுக்கான கற்கை அலகுகளை மாற்ற முடியாது. அதற்கான காரணம், தற்போது காணப்படும் பாடத்திட்டத்தில் ஒவ்வொரு பிரதான பாடத்துக்கும் இரண்டு கற்கைநெறி அலகுகளே காணப்படுவதாகும். அதனால் அவற்றை மாற்றி தெரிவுசெய்வதற்கு வேறு கற்கைநெறி அலகுகள் இல்லை.*

*பிரதான பாடத்தை மாற்றுவதாயின் 200 மட்டத்தின் ஆரம்பத்தில் ஒரு தடவையில் ஒரு பாடத்தை மட்டும் மாற்ற முடியும். அவ்வாறு மாற்றினால் மாற்றிய குறித்த புதிய*

*பாடத்தின் 100 மட்டத்திலுள்ள இரு கற்கைநெறி அலகுகளையும் 200 மட்டத்தில் தெரிவுசெய்து பரீட்சைக்கு தோற்ற வேண்டும். குறித்த பாடத்திற்கான 100 மட்ட பரீட்சை நடைபெறும் போதே மேற்படி விடுபட்ட பாடத்துக்காக கற்கைநெறி அலகுகளுக்கு தேற்ற முடியும். 200 மட்டத்தில் புதிதாக தெரிவுசெய்த 100 மட்ட பாடத்துக்கான கற்கைநெறி அலகுகளானவை 200 மட்ட அதிகூடிய 16 கற்கைநெறி அலகுகளில் உள்ளடங்காது.*

***8. கேள்வி*** : பட்ட கற்கைநெறியை பிற்போடுதல் (Deferment) மற்றும் விடுமுறை பெற்றுக்கொள்ளல் (Leave of Absence) ஆகிய இரண்டிற்குமிடையிலான வித்தியாசம் என்ன?

***பதில்*** : *பட்ட கற்கைநெறியை பிற்போடுதல் என்பது 100 மட்ட பரீட்சை நடைபெறுவதற்கு முன் கங்கைநெறியை பிற்போடுவதாகும். 100 மட்ட பரீட்சைக்கு விண்ணப்பிக்காமலும் கற்கைநெறியை பிற்போடாமலும் இருந்தால் தானாவே பதிவு இரத்துச் செய்யப்பட்டுவிடும். பதிவுக் கட்டணமும் மீளளிக்கப்பட மாட்டாது. அதனால் பதிவு இரத்துசெய்யப்பட்டுவிடாமல் பாதுகாத்துக்கொள்வதற்கு, தகுந்த காரணங்களுடன் கற்கைநெறியை பிற்போடல் வேண்டும். இல்லாவிடின் பரீட்சைக்கு முகம்கொடுக்க முடியாவிடினும் பரீட்சைக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.*

*விடுமுறை பெற்றுக்கொள்ளல் என்பது 200 மற்றும் 300 மட்டங்களிலேயே பெற்றுக்கொள்ள முடியும். அச்சமயத்தில் நீங்கள் குறைந்தது ஒரு மட்டத்தையாவது பூர்த்தி செய்திருப்பதால் உங்களது பதிவு இரத்துச் செய்யப்பட மாட்டாது. இருப்பினும் 200 மற்றும் 300 மட்டங்களின் பரீட்சைகளுக்கு நீர் சமூகமளிக்காததால் Incomplete (I) என்ற பெறுபேறு கிடைக்கப்பெறும். மீண்டும் அப்பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சைக்கு தோற்றும் போது அவ்வமர்வு "மீளெடுத்தல்" (Retakes) எனக் கொள்ளப்படும். மீளெடுத்தல் பரீட்சையை நீங்கள் மிக நன்றாகவே எழுதியிருப்பினும் ஆகக் கூடிய பெறுபேறாக 'C+' மட்டுமே கிடைக்கும்.*

***9. கேள்வி*** : மருத்துவ காரணங்கள் / வேறு காரணங்கள் அல்லது இவ்விரண்டு காரணங்களுக்காகவும் நீடித்துக்கொள்ளலுக்கும் (Extension) வேறு காரணங்களுக்காக விடுமுறை பெற்றுக்கொள்வதற்கும் (Leave of Absence) வேறுபாடு யாது?

***பதில்*** : *கலை பட்டப்படிப்பு சபை ஏற்றுக்கொள்ளும் வகையிலான காரணங்களை முன்வைத்து விடுமுறைக்கு விண்ணப்பிக்கும் போது வகுப்பு சித்தியுடன் கூடியதாக விடுமுறையைப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியம் உள்ளது. நீடித்துக் கொள்ளல் விடயத்தில் நீங்கள் அதற்காக விண்ணப்பிக்காத போதிலும் உங்களது பதிவு புதுப்பிக்கப்படும். அதற்கு கலை பட்டப்படிப்பு சபையினதோ அல்லது வேறு நபரினதோ அனுமதி தேவையில்லை. அச்சமயத்தில் நீடிப்புடன் பரீட்சைக்கு மீள முகங்கொடுப்பதற்கான வாய்ப்பு மட்டுமே உமக்கு கிடைக்கும். ஆனால் உமது பதிவை இரத்துச் செய்யாது காப்பது முக்கியமானதாகும்.*

***10. கேள்வி*** : அவசரமான ஒரு தேவைக்காக பரீட்சைக்கு சமூகமளிக்க முடியாத சூழ்நிலையில் மட்டுமா விடுமுறை பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க வேண்டும்?

***பதில்*** : *இல்லை. மூன்று மட்டங்களிலும் அனுமதி பெற்றுக்கொண்டு ஒவ்வொரு மட்டத்திலும் (முழு மட்டத்திற்கும்) கற்கைநெறியிலிருந்து விடுமுறை பெற்றுக்கொள்ளலாம். கற்கைநெறியை பிற்போடுவது என்பது முழு 100 மட்டத்திலும் விடுமுறை பெற்றுக்கொள்வதாகும். அதற்கு வெவ்வேறு காரணங்களைச் சமர்ப்பிக்கலாம். உதாரணமாக: வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளல், கர்ப்பமாதல் போன்றவை.*

*கற்கைநெறியை பிற்போடுவது என்பது கற்கைநெறியின் ஆரம்ப காலத்தை பிற்பாடுவதாகும். கற்கைநெறிக் காலத்தை பிற்போடுவதன் ஒரோயொரு எதிர்மறையான விளையு என்பது பட்டத்தை நிறைவு செய்வதற்கு வழங்கப்படும் மொத்த 10 தடவைக் காலத்தில் பிற்போடுகின்ற விடுமுறைக் காலம் குறைக்கப்படுவதாகும் (கழிக்கப்படும்). இப்பிற்போடுதல் வகுப்புடன் கூடிய பட்டத்தை பெற்றுக்கொள்வதில் செல்வாக்கு செலுத்த மாட்டாது.*

*200 மற்றும் 300 மட்டங்களின் ஆரம்பத்தில் கூட ஒருவர் முழு மட்ட காலத்துக்கும் மேற்குறிப்பிட்டவாறு தகுந்த காரணங்களுக்காக தங்களுக்கு தேவையான விடுமுறையை பெற்றுக்கொள்ளலாம். ஆனால் நீங்கள் விடுமுறை பெற்றுக்கொள்வதற்கான காலத்தை தொளிவாக குறிப்பிடல் வேண்டும். முழு மட்டத்துக்கு விடுமுறை பெற்றுக்கொள்டால் அம்மட்டத்தில் நடைபெறும் கருத்தரங்குகளிலும் கற்கை தொடர்பான ஏனைய நிகழ்வுகளில் பங்குகொள்ளாதிருப்பதற்கான விடுமுறையும் கிடைக்கப்பெறும்.*

*கருத்தரங்குகளுக்கு சமூகமளித்து, அவசர காரணங்களுக்காக பரீட்சைக்கு சமூகமளிக்க முடியாவிடின், மீண்டும் அதே பரீட்சைக்குத் தோற்றும் போது கருத்தரங்குகளுக்கு சமூகமளிக்கத் தேவையில்லை.*

***11. கேள்வி*** : 100 வது மட்ட பரீட்சையிலிருந்து மட்டும் விடுமுறை பெற்றுக்கொள்ள முடியுமா?

**பதில்** : *முடியும். அச்சமயத்திலும் கற்கைநெறியை பிற்போடுதலாக கொள்ளப்படும். ஆயிலும் கருத்தரங்குகளுக்கு சமூகமளித்து, அவசர காரணங்களுக்கா பரீட்சைக்கு சமூகமளிக்க முடியாவிடின் மீண்டும் அப்பரீட்சைக்குத் தோற்றும் போது கருத்தரங்குகளுக்கு சமூகமளிக்கத் தேவையில்லை.*

***12. கேள்வி*** : 300 மட்டத்தின் பரீட்சை பெறுபேறுகள் வெளியிட்ட பின்னர் 100, 200 மற்றும் 300 மட்டங்களுக்கான பாடங்களின் மீள் பரீட்சைகளுக்கு தோற்ற வேண்டியிருந்தால் அப்பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கு நான் விண்ணப்பிக்க வேண்டுமா? அவ்வாறான சூழலில், பதிவை புதுப்பித்துக்கொள்வதற்கான கட்டணத்தை எவ்வாறு கணக்கிடுவீர்?

**பதில்** : *300 மட்டத்தின் பின் மீள் பரீட்சைக்கு தோற்றவேண்டுமாயின் பதிவை நீடித்துக்கொள்வதற்கு விசேடமாக கோரத்தேவையில்லை. தாம் மீள் பரீட்சை எழுத வேண்டிய பாடங்களின் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரும் தினங்களை அவதானித்துக்கொண்டிருந்து பரீட்சைக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.*

*ஒரு மாணவ குழுவின் முதலாவது தடவை அல்லது முதலாவது கல்வியாண்டு என்பது அவர்கள் பதிவு செய்த திகதியிலிருந்து அவர்களது 100 மட்ட பரீட்சைகளின் முடிவு காலப்பகுதியாக இருக்கும். அடுத்த தடவைகள் என்பது CDCE ஆல் அடுத்த 100 மட்ட பரீட்சைகள் நடைபெறும் திகதிகளை அடிப்படையாக வைத்து தீர்மானிக்கப்படும். அவ்வாறான கல்வியாண்டுகளை கணக்கிற் கொண்டு பதிவு புதுப்பித்தல் கட்டணம் அறவிடப்படும். குறித்தவொரு வருடத்தில் மாணவக் குழுவினர் பதிவுசெய்யப்பட்ட ஆரம்ப திகதியிலிருந்து 100 மட்டத்தில் 10 பரீட்சைகள் நிறைவுற்ற பின்னர் அக்குழுவின் பதிவு இரத்து செய்யப்பட்டுவிடும்.*

***13. கேள்வி*** : என்ன காரணங்களுக்காக கற்கைநெறி அலகுகளுக்காக மீள்-பரீட்சை எழுத வேண்டும் என்பதை எவ்வாறு தீர்மானிப்பது?

**பதில்** : *சித்தியடையாத எல்லா கற்கைநெறி அலகுகளுக்கும் கட்டாயமாக மீள்-பரீட்சைக்கு சமூகமளித்தல் வேண்டும். மீள்-பரீட்சைக்கு சமூகமளிக்காவிடின், குறித்த கற்கை*

*அலகுகளுக்கு கிடைக்க வேண்டிய திறமைப் பெறுமானங்கள் (Credit Values) கிடைக்காமல் போய்விடும். இதனால் கடைசியில் பட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான 90 திறமைப் பெறுமானங்களைப் பெற்றுக்கெள்ள முடியாமல் பட்டத்தையும் பெற்றுக்கொள்ள முடியாது போய்விடும். பிரதான பாடங்கள் மற்றும் துணைப்பாடங்களில் ஒரு கற்கைநெறி அலகுக்குரிய 3 திறமைப் பெறுமாங்களை பெற்றுக்கொள்வதற்கு குறைந்தது ஆகக்குறைந்தமட்ட சித்தியாகிய 'D+' மற்றும் 'D' ஆகிய சித்தியையாவது பெறல் வேண்டும். அடிப்படைக் கற்கைநெறிகளில் ஒரு கற்கைநெறி அலகுக்குரிய 3 திறமைப் பெறுமாணங்களை பெற்றுக்கொள்வதற்கு குறைந்தது ஆகக்குறைந்த மட்ட சித்தியாகிய 'C' சித்தியையாவது பெறல் வேண்டும்.*

*Incomplete (I) பெறுபேறு ஒரு தரமாக கொள்ளப்படாததால் அக்கற்கைநெறி அலகுகளுக்கான பரீட்சைகளுக்கு மீண்டும் தோற்றல் வேண்டும்.*

*ஒரு கற்கைநெறி அலகிற்கான பரீட்சையில் 'C+' க்கும் குறைவான பெறுபேற்றை பெற்ற வேளையில் 'C+' வரைக்குமான பெறுபேற்றை பெற்றுக்கொள்வதற்காகவும் மீள்பரீட்சைக்கு முகம்கொடுக்கலாம்.*

*அதிகள்விலான 'D+' மற்றும் 'D' பெறுபேறுகளை பெற்றிருப்பின், பட்டக் கற்கையின் கடைசியில் பட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் அவசியமான 2.00 CGPA ஐ பெற்றுக்கொள்ள முடியாது போகும். காரணம் 'D+' என்பது 1.30 CGPA ஐயும் 'D' என்பது 1.00 CGPA ஐயும் கொண்டதாகும். இக்குறைந்த தரங்களைக் கொண்டு பட்டத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதாகையால், பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான 2.00 CGPA ஐ பெற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்தல் வேண்டும். 'C+' என்பது 2.3 CGPA கொண்டதாகையால் 'D+' மற்றும் 'D' தரங்களை C+ வரை உயர்த்திக்கொள்ள முயற்சி செய்தல் வேண்டும்.*

***14. கேள்வி*** : மூன்று மட்டங்களிலும் முதல்தடவையில் சித்தியடைந்து ஒன்றோ அல்லது பல கற்கைநெறி அலகுகளில் மிகக்குறைந்த மட்ட சித்தியை ('D+' மற்றும் 'D') பெற்றிருப்பின் வகுப்புடன் கூடிய பட்டத்தைப் பெற்றுக்கொள்ளலாமா? 100 மட்டத்தில் மிக்ககுறைந்த தர சித்திகளைப் பெற்ற கற்கைநெறி அலகுகளுக்கு, 200 மற்றும் 300 மட்டங்களில் மீள்-பரீட்சைக்கு தோற்றி வகுப்பு பட்டத்தைப் பெற்றுக்கொள்வது சாத்தியமா?

***பதில்*** : *இரண்டு கேள்விகளுக்குமான பதில் ஆம், முடியும் என்பதாகும். ஆனால் வகுப்பு சித்திக்கு அவசியமாக CGPA ஐ பெற்றிருத்தல் வேண்டும். அதாவது 3.00 CGPA அல்லது அதற்கு கூடிய CGPA ஐ பெற்றிருத்தல் வேண்டும்.*

*ஆனால் மூன்று மட்டங்களுக்குள்ளும் ஏதாவது ஒரு கற்கைநெறி அலகில் சித்தியடையத் தவறின் மூன்று மட்ட முடிவிலும் 3.00 CGPA இருப்பினும் ஒரு கற்கைநெறி அலகில் சித்தியடைய தவறிய காரணத்தினால் வகுப்புடன் கூடிய பட்டத்தைப் பெற முடியாது.*

***15. கேள்வி*** : ஒரு கற்கை நெறி அலகுக்கு எத்தனை முறை மீள்-பரீட்சை எழுதலாம்? ஒரு மீள்-பரீட்சைக்கு தோற்றி அக்கற்றைநெறியில் முந்தைய பெறுபேற்றை விட குறைவான பெறுபேறு கிடைப்பின் என்ன நடக்கும்?

***பதில்*** : எத்தனை முறை பரீட்சை எழுதலாம் என்பது குறித்த கற்கைநெறி அலகுக்கான மட்டத்திற்கமைய தீர்மானிக்கப்படும். 100 மட்டத்திலுள்ள கற்கைநெறி அலகாயின் 9

முறை மீள்பரீட்வை எழுதலாம். 200 மற்றும் 300 மட்டங்களிலுள்ள கற்கைநெறி அலகுகளைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட 8 மற்றம் 7 முறைகள் மீள்-பரீட்சை எழுதலாம். உங்களின் 100 மட்டத்திலிருந்து அமர்வுகளை கணக்கெடுப்பதன் மூலம் பட்டத்தை நிறைவுசெய்வதற்காக செய்யப்படும் ஒவ்வொரு புதுப்பித்தல் பதிவிற்கும் கட்டணம் அறவிடப்படும்.

ஒரு கற்கைநெறி அலகின் இறுதிப் பெறுபேற்றை கணிப்பிடுகையில் அக்கற்கைநெறி அலகிற்காக பெற்றுக்கொண்ட பெறுபேறுகளில் ஆகக்கூடிய பெறுபேறு கருத்திற்கொள்ளப்படும். ஆதலால் மீள்பரீட்சைக்கு முகம்கொடுக்கும் போது கிடைக்கும் பெறுபேறு குறைவானதாயிலும் அக்கற்கைநெறி அலகிற்கு முன்னர் பெற்றுக்கொண்ட பெறுபேறு கூடியதாயின் கூடிய பெறுபேறு இறுதிப் பெறுபேறாக கருத்திற்கொள்ளப்படும்.

***16. கேள்வி*** : ஒருவர் ஒவ்வொரு மட்டத்திலுமான பரீட்சையில் ஆகக்கூடுதலாக எத்தனை கற்கைநெறி அலகுகளுக்கு தோற்றலாம்? அதற்கான ஏதாவது எல்லை உண்டா?

***பதில்***

*ஆம், அதற்கு ஒரு எல்லை உண்டு.*
*100 மட்டத்தில் 12, 200 மட்டத்தில் 16 மற்றும் 300 இல் 14 கற்கைநெறி அலகுகளாகும்.*

*100 மட்டதில் நீங்கள் உள்ளபோது, 200 மற்றும் 300 மட்டங்களின் பரீட்சைகள் நடந்துகொண்டிருக்கும் போது, நீர் விரும்பினால் இரண்டு கற்கைநெறி அலகுகளின் பரீட்சைகளில் தோற்ற முடியும்.*

*200 மட்டத்திற்குரிய 10 கற்கைநெறி அலகுகளுக்கு மேலதிகமாக இன்னும் 6 கற்கைநெறி அலகுகளைக் கற்க முடியும். அந்த 6 கற்கைநெறி அலகுகளுக்குள் 100 மட்டத்தில் மீள்-பரீட்சை எழுதும் கற்கைநெறி அலகுகளும் 300 மட்ட கற்கைநெறி அலகுகளும் அடங்கலாம்.*

*300 மட்டத்திற்குரிய 10 கற்கைநெறி அலகுகளுக்கு மேலதிகமாக இன்னும் 4 கற்கைநெறி அலகுகளைக் கற்க முடியும். அந்நான்கு கற்கைநெறி அலகுகளில் 100 மற்றும் 200 மட்டங்களின் மீள-பரீட்சைக்கு முகம்கொடுக்க வேண்டிய கற்கைநெறி அலகுகளும் அடங்கலாம். திறமைப் பெறுமானம் அற்ற (Non-credit) கற்கைநெறி அலகுகள் மேற்படி மேலதிக கற்கைநெறி அலகுகளில் அடங்காது. மாணவர்கள் எத்தனை திறமைப் பெறுமானம் அற்ற கற்கைநெறி அலகுகளையும் அவற்றுக்கான பரீட்சைகள் நடந்தேறும்போது எடுக்கலாம். திறமைப் பெறுமானம் அற்ற (Non-credit) கற்கைநெறி அலகுகளுக்கான பெறுபேறுகள் CGPA கணிப்பீட்டின்போது கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. ஆனாலும் அவைகள் பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரத்தில் திறமைப் பெறுமானம் அற்ற (Non-credit) கற்கைநெறி அலகுகள் என உள்ளடக்கப்பட்டிருக்கும்.*

*தாம் இருக்கும் மட்டம் என்ன என்பதை தீர்மானிப்பது, குறித்த தொகுதி மாணவர் குழுவுக்கு CDCE இனால் நடாத்தப்படும் பரீட்சையின் அடிப்படையிலாகும். ஏற்றுக்கொள்ளக்கூடிய மருத்துவ மற்றும் வேறு காரணங்களால் நீர் விடுமுறை எடுத்து உமது கற்கைத் தொகுதியை நீர் இழப்பதைத் தவிர்த்து, மேற்குறிப்பிட்ட வழியில் உமது மட்டம் தீர்மானிக்கப்படும்.*

***17. கேள்வி*** : பரீட்சைப் பெறுபேறுகள் எவ்வாறு தரப்படுத்தப்படுகின்றன?

***பதில்*** : *பெறுபேறுகள் தரப்படுத்தல் என்பது குறித்த கற்கை அலகிற்காக பரீட்சையில் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை பகுப்பாய்வுக்குட்படுத்தி ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்விசார் மதிப்பீட்டு வழிமுறைக்கமைய பெறுபேறுகளை தரப்படுத்துவதாகும். இங்கு 'E' முதல் 'A' வரையான தரங்களுக்கான புள்ளிகள் தீர்மானிக்கப்படும்.*

*இதில் எதிர்ப்பார்க்கப்படுவது என்னவெனில், ஒரு கற்கைநெறிக்கான பரீட்சையில் மிகவும் சரியானதும் சமநிலையானதும் தரப்படுத்தப்பட்டதுமான மதிப்பீட்டை மேற்கொள்வதற்காக வினாப்பத்திரங்களில் உள்ள வேறுபாட்டையும் வேறுபட்ட பரீட்சகர்களினால் இடப்படும் புள்ளிகளிலுள்ள வேறுபாட்டையும் குறைப்பதே ஆகும்.*

***18. கேள்வி*** : பேராதனை தொடர் தெலைக்கல்வி நிலையத்தில் அன்றி வேறு இடங்களில் பரீட்சை நடைபெறுமா?

***பதில்*** : குறித்த இடங்களில் போதுமானளவு மாணவர் எண்ணிக்கை இருப்பின் பரீட்சை நடைபெறும்.

***19. கேள்வி*** : பரீட்சைப் பெறுபேறு வெளியிட எவ்வளவு காலம் எடுக்கும்.

***பதில்*** : பரீட்சை முடிந்ததிலிருந்து 3 – 4 மாதங்களுக்குள் பெறுபேறு வெளியிட முயற்சி எடுக்கப்படும்.